**செய்தி வெளியீடு :554** **நாள் : 25.11.2016**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் தலைமையில் இந்திய உடல் உறுப்பு தான வார விழிப்புணர்வு பேரணி மற்றும் கருத்தரங்கம்!**

**உடல் உறுப்பு தானம் செய்ய மக்கள் பெருமளவில் முன்வர மாண்புமிகு அமைச்சர் வேண்டுகோள்!**

**----**----**

இந்திய உறுப்பு தான வாரத்தையொட்டி இன்று (25.11.2016) சென்னை மெரினா கடற்கரையில் ஒரு மாபெரும் பேரணியை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் மற்றும் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன் இ.ஆ.ப., ஆகியோரால் துவக்கி வைக்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக தமிழ்நாடு முழுவதும் மாவட்ட தலைநகரங்களில் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை சார்பில் இந்திய உடல் உறுப்பு தான வார விழிப்புணர்வு பேரணி நாளை நடத்தப்படவுள்ளது.

மூளைச்சாவடைந்த உறவினரின் உறுப்புகளை, துயரமான சூழலிலும், எந்தவித எதிர்பார்ப்புமின்றி, மனிதாபிமானத்துடன் உடலுறுப்பு மாற்று சிகிச்சை தேவைப்படுபவர்களுக்கு தானமாக அளித்து, சமுதாயத்திற்கு முன்னுதாரணமாக திகழ்ந்த நல்ல உள்ளங்களை கௌரவிக்கும் விதமாக இந்நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது. அதேசமயத்தில் உடலுறுப்பை சரியான முறையில் பெற்று அதனை பாதிக்கப்பட்டவர்களுக்கு சிறப்பான முறையில் உரிய காலத்தில் பயன்படுத்திய மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவக் குழுவினர்கள் மற்றும் TRANSTAN அமைப்பினரையும் மாண்புமிகு அமைச்சர் வெகுவாக பாராட்டினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் :-

உடலுறுப்பு மாற்று அறுவை சிகிச்சைத் திட்டம் இந்தியாவின் பல மாநிலங்களில் செயல்பாட்டில் உள்ள போதும், மற்ற மாநிலங்களை காட்டிலும், தமிழகத்தின் செயல்பாடு வெகு சிறப்பாக உள்ளது. இறந்தவர்களின் உடல் உறுப்புகளைக் கொண்டு உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை சிறப்பு செயல்பாட்டிற்கான தேசிய விருது புதுடில்லியில் நடைபெற்ற விழாவில் தமிழ்நாடு அரசுக்கு வழங்கப்பட்டது.

ரஷ்ய நாட்டின் சைபீரிய பகுதியைச் சேர்ந்த 11 வயதுடைய **விக்டோரியா இவனோவா** என்ற பெண்ணிற்கு ரஷ்யா மற்றும் ஜெர்மனியில் செய்ய இயலாத **இதய மாற்று அறுவை சிகிச்சை** இந்தியாவின் மருத்துவத் தலைநகராம் சென்னையில் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது. இதற்கெல்லாம் அச்சாரமாக அமைந்தது **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா** அவர்களால் அமைக்கப்பட்டு அதன் தலைவராக உள்ள Transplant Authority of Tamil Nadu (TRANSTAN) எனும் முன்னோடி அமைப்பு என்றால் அது மிகையாகாது என்றார்.

மேலும் இந்நிகழ்ச்சியில் உடல் உறுப்பு தானம் செய்வதை எளிமையாக்கும் விதமாக உருவாக்கப்பட்டுள்ள இணையதளம் (www.transtan.tn.gov.in )மாண்புமிகு அமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. இந்த இணையதளத்தில் Online மூலம் பதிவு செய்து உடல் உறுப்பு கொடை வழங்கியதற்கான உடனடி ஒப்புதலையும் பெறமுடியும்.

இக்கூட்டத்தில் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன் இ.ஆ.ப., இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறை ஆணையர் திரு. மோகன் பியாரே இ.ஆ.ப., தமிழ்நாடு மருத்துவ பணிகள் கழக மேலான்மை இயக்குநர் செல்வி அபூர்வா இ.ஆ.ப., உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து கட்டுப்பாடு துறை ஆணையர் திருமதி அமுதா இ.ஆ.ப., டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழக துணை வேந்தர் மரு. எஸ். கீதாலட்சுமி, மருத்துவக் கல்வி இயக்குநர் மரு. நாராயணபாபு, மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் மரு. செங்குட்டுவன், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துகள் துறை இயக்குநர் மரு. குழந்தைசாமி, மோகன் பவுன்டேஷன் நிறுவனர் மரு. சுனில் ஷெரப், உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை திட்ட ஒருங்கிணைப்பாளர் மரு. பாலாஜி உள்ளிட்ட மருத்துவத் துறை உயரதிகாரிகள் கலந்து கொண்டனர்.

———***———

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**